# வித்தகர் இயற்றிய வினைமாண் பாவை விளக்கு

# Craftsmenship of Lady Lamp made by Skilled Artisans

**பேராசிரியர் பா. ஷீலா**

பதிவாளர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் – 624 101.

மின்னஞ்சல் : sheelaudai1970@gmail.com

A beautiful female figure lamp with both hands is called Paavai Vilakku. It is made of clay and metal by skilled artisans with exquisite workmanship and delicate carvings. Its history has hoary past which is about five thousand years. The origin and development of Paavai Vilakku can be traced from archaeological remains, literature, inscriptions and temple sculptures. Holding a lamp in a woman's hand which is considered a symbol of grace and dignity indicates that life will be auspicious Beautiful Paavai Vilakku designed by excellent craftsmen of Yavanas (Greeks) were used in the Palace of the Pandyas during the Sangam age. In Saivite and Vaishnavite temples female figures adorned in various attires and ornaments are seen carrying lamps. Parrots are gracefully placed on their shoulders. Not only female figures are seen in the temples but also male figures also seen. People have also made Paavai Vilakku in their images for their Prayers. These features are a mirror of the society and culture of the people. Therefore, the purpose of this article is to know about the craftsmanship of lamp made by skilled artisans.

**Key words :**Deepam, Paavai Nonbu, Paavai Vilakku, Yavanas, Vilakku Nachiyar, Maaunu Ammani.

## ஆய்வுச்சுருக்கம்

இரு கரங்களால் விளக்கேந்திய அழகிய பெண் உருவத்தினை பாவை விளக்கு என்று அழைப்பர். மண் மற்றும் உலோகத்தினாலான பாவை விளக்குகள் கண்கவர் வனப்புடன் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் திறமையான கைவினைஞர்களால் செய்யப்படும். பாவை விளக்கின் வரலாறு சுமார் ஐயாயிரம் ஆண்டு காலமாகும். தொல் அகழாய்வுப் பொருள்கள், இலக்கியங்கள், கல்வெட்டுகள், கோயில் சிற்பங்கள் வாயிலாக பாவை விளக்கின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை அறியலாம். பெருமையின் அடையாளமாகக் கருதப்படும் பெண் கையில் விளக்கேந்துதல் இல்வாழ்க்கை சிறப்புற அமைவதைக் குறிப்பதாகும். சங்க கால வேந்தர்களின் அரண்மனைகளில் வெளிநாட்டினரான யவனர்கள் (கிரேக்கர்கள்) தங்களது கைத்திறன் மிகுந்த அழகிய பாவை விளக்குகளை செய்தளித்துள்ளனர். சைவ, வைணவ கோயில்களில் பல்வேறு ஆடை அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட பெண் உருவங்கள் தீபவிளக்கை ஏந்தி எழிலுடன் காட்சியளிக்கின்றன. அவற்றின் தோள்களில் கிளிகள் பாங்குற அமைந்துள்ளன. பெண் உருவங்கள் மட்டுமின்றி ஆணுருவங்களும் காணப்படுகின்றன. மக்கள் அவரவர் உருவங்களிலும் பாவை விளக்குகளைத் தங்களது வேண்டுதல் பொருட்டு செய்தளித்துள்ளனர். இவ்வுருவங்கள் மக்களின் சமுதாய, பண்பாட்டினை எடுத்தியம்பும் காலக்கண்ணாடியாகும். ஆகையால் வித்தகர் இயற்றிய வினைமாண் பாவை விளக்கைப் பற்றி அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

## குறியீட்டுச் சொற்கள்

தீபம், பாவை நோன்பு, பாவை விளக்கு, யவனர், விளக்குநாச்சியார், அம்முனு அம்மணி.

## முன்னுரை

மரம், தந்தம், உலோகத்தாலான விளக்குகள், பரிகலங்கள், அடுகலங்கள் போன்ற அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் பொருள்கள் கண்கவர் வனப்புடன் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்தால் அவை கலைப்பொருள்கள் எனப்படும். கலை மிகுந்த பொருள்களைச் செய்வோர் பண்டைக்காலத்தில் பலர் இருந்தனர். அவர்கள் மரங்கொல் தச்சர், மண்ணீட்டாளர், செம்பு செய்ஞ்ஞர், பைம்பொன் செய்ஞ்ஞர் என அழைக்கப்பட்டனர். இக்கலைப்பொருள்கள் தமிழர் கைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தமிழர்கள் கைவினை வரலாறு மிக நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் இக்கலைச் சின்னங்களைப் பெருங்கற்காலம் (பொ.ஆ.மு. 1000) முதற்கொண்டு அறியலாம்.

## தீபம்

மேனோக்கி வியாபித்து இருளை நீக்க வல்ல தீபம் மனிதர்களுக்கு உற்சாகத்தையும் சக்தியையும் உண்டாக்குவதுடன் சகல புண்ணியங்களையும் தரவல்லது என்ற நம்பிக்கை இந்துக்களிடையே இருந்து வருகிறது.[1]

தீபம் என்பது அறியாமை என்னும் இருளை அகற்றும் ஒளி என்பதால் இந்துக்கள் சுபகாரியங்களை விளக்கேற்றித் துவக்குவது வழக்கமாகும். இறைவனையே ஒளி வடிவில் காண்பதால் சூரியனை 'கண்ணுக்குத் தெரிந்த கடவுள்' என்பர். எனவே, தீப விளக்கு என்பது இந்துக்களின் புனிதச் சின்னமாகும்.

தீயின் தேவையை உணர்ந்த மனிதன் நிலையான வாழ்வை மேற்கொண்டபோது தீக்குண்டத்தை வளர்த்தான். அக்னிக் குண்டத்திலிருந்து தீக்கடைக்கோல் கண்டான்.[2] அதனின்று பெறப்பட்ட விளக்கானது இன்று மக்களின் கையடக்கத்துக்குள் வந்துவிட்டது. இந்த விளக்குகள் எல்லாம் ஆதிமூலமான சூரியனிடத்திலிருந்து வந்ததாகும். அதனாற்றலை உணர்ந்துகொண்டதால்தான் திருமூலரும்[3] வடலூர் வள்ளலாரும்[4] சோதி வழிபாட்டை வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் ஒளியைத் தெய்வமாக உருவகப்படுத்தினர். தீயின் நிறம் சிவப்பு என்பதால் அதனைச் சிவந்த + சிவந்தம், 'சிவம்' என்றழைக்கத் தொடங்கினர். தீக்கடைக்கோலின் அடிப்படை உண்மை உலகுக்குத் தெரியவே சிவலிங்க வழிபாட்டு முறையைக் கொண்டு வந்தனர். உயிர் விளக்கின் ஒளி வடிவாய் இருப்பதாக நம்புவதால் இறந்தவரை அடக்கம் செய்தாலும் அவர் வசித்த இடத்தில் விளக்கொன்று ஏற்றி வழிபடும் பழமையான மரபு இன்றும் வழக்கத்தில் உள்ளது.

## தீபாலங்கார தத்துவம்

தீபம் ஆத்மாவின் மலத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுக்கவல்லது. தீபத்திற்குத் திரி, கற்பூரம், துணி, நூல், பஞ்சு போன்றவைகளில் எதையாவது ஒன்றை உபயோகித்து தீபம் ஏற்றப்படுகிறது. தீபம் ஏற்ற பசுவின் நெய் உபயோகிப்பது உத்தமம் என்றும், எண்ணெய் மத்திமம் என்றும் தத்துவ நூல்கள் உணர்த்துகின்றன.

உயிர்கள் ஊர்வன, நீந்துவன, பறப்பன, நடப்பன எனும் முறையில் விரிந்து, பஞ்ச பூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கி, இறுதியில் கற்பூரதீபம்போல் எரிந்து எவ்வித மிச்சமுமின்றி இறைவனோடு ஒன்றிவிடும்.[5] மண், நீர், அனல் (தீ), நிலம் (காற்று), வான், சூரியன், சந்திரன், ஆன்மா எனும் அட்டமூர்த்தங்களாய் இறைவன் விளங்குகிறான் என்பதை அப்பர் வாக்கால் உணரலாம். அட்டமூர்த்தங்களில் அக்கினி, சூரியன், சந்திரன், ஆன்மா எனும் நான்கும் தீயின் அம்சமாகும்.

இறைவன் அழல் உருவினன் என்பதை இந்துமதம் வலியுறுத்துகிறது. தீ அதனை அடைந்த பொருள்களின் அழுக்கைப் போக்கித் தன்மயமாக்கும். அதுபோல, இறைவன் உயிர்களின் ஆணவ அழுக்கை அகற்றித் தன்மயமாக்குவான்.

சரியையெனும் தாஸமார்க்கத்தில் 'தீதில் திருவிளக்கிட்டு' என சிவஞானசித்தியாரிலும்,[6] 'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானமாகும்'[7] என தேவாரத்திலும் கூறுமாறு அநேக அடியார்கள் ஆலயங்களில் திருவிளக்கிட்டுப் பேறு பெற்றுள்ளார்கள். இடைக்கால தமிழகக் கல்வெட்டுகளில் பெரும்பாலானவை விளக்கு தானங்களைப் பற்றியே பேசுகின்றன. பல்வேறு தண்டனைகளுக்கு அபராதமாக கோயில்களில் விளக்கேற்றுதலை மேற்கொண்டுள்ளதையும் அக்காலக் கல்வெட்டுகளில் அறியலாம்.

விளக்குகளில் காமாட்சி விளக்கு, அஷ்டலக்ஷ்மி விளக்கு, குத்து விளக்கு, அன்னபக்ஷி விளக்கு, பாவை விளக்கு, நில விளக்கு, வாசல் மாலை விளக்கு, நுந்தா விளக்கு, கிளை விளக்கு, கை விளக்கு, அகல் விளக்கு, கரக விளக்கு, தொங்கல் விளக்கு என பலவகை விளக்குகள் உள்ளன. அவற்றுள் பாவை விளக்கு குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். 'விளக்கு ஒரு விளக்கம் தாங்கி' என்ற இராமாயணப் பாடல் வரிக்கு ஏற்ப பாவை விளக்கு காண்பவரை வியக்கும் வண்ணம் அமைந்திருக்கும்.

பெண்ணொருத்தி தனது இரு கைகளினால் விளக்கொன்றினை ஏந்தியவாறு தெய்வீக எழிலுடன் நின்ற நிலையில் காணப்படுவதே பாவை விளக்கு என அழைக்கப்படுகிறது. இது கை விளக்கேந்திய காரிகை, தீபலக்ஷ்மி, விளக்கு லக்ஷ்மி, விளக்குடன் காரிகை என்று பல பெயர்களில் அழைக்கப்படும். இவ்விளக்கு கல், மண், உலோகத்தினால் செய்யப்படும். பெரும்பாலும் உலோகத்தினாலாக்கப்பட்டுள்ளது.

இதிலுள்ள பெண்ணுருவம், அது உருவாக்கப்பட்ட காலம் மற்றும் நிலத்திற்குண்டான முக அமைப்பு, தலை அலங்காரம், ஆடை, ஆபரணங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெண்ணுருவம் மட்டுமின்றி ஆண் மக்கள், ஆஞ்சநேயர் போன்ற உருவங்களும் விளக்குகள் ஏந்திய நிலையில் காணப்படுவதுண்டு. பாவை விளக்கு செய்தளிக்கும் பக்தர்கள் தங்கள் உருவில் செய்தளித்துள்ளமை குறிப்பிடத் தகுந்ததாகும்.

## பாவை : ஒரு விளக்கம்

பாவை என்ற சொல்லுக்கு உருவம் என்று பொருள்.[8] கல்,[9] மண்,[10] சுதை,[11] தந்தம்,[12] உலோகம்[13] போன்ற பொருள்களில் செய்தமைத்த உருவங்களைப் பாவை என்பர். சுடுமண்ணால் பாவை செய்யும் வழக்கம் பெருங்கற்காலத்திலே இருந்து தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது.[14]

சங்க இலக்கியத்தில் நன்னன் என்னும் மன்னன் பெண்ணொருத்திக்கு அளித்த தண்டனைக்கு பொன்னாலான உருவம் சமைத்தளிக்க முற்பட்ட செய்தியைக் காணலாம்.[15] பாவை என்பது அழகு மிகுந்திருக்கும் பதுமை அல்லது பெண் வடிவத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடியதாகக் கூறப்படும் பதினொரு வகை ஆடல்களில் 'பாவைக்கூத்து' என்பது அவுண்ண வெவ்விய போர் செய்தற்கும் சமைந்த போர்க் கோலத்தோடு மோகித்து விடும்படி கொல்லிப்பாவை வடிவாகத் திருமகள் ஆடியதாகும். மழை பொழிவதற்கும் இனிய இல்வாழ்வு அமைவதற்கும் சக்தியை வேண்டி கன்னியர் பாவை வடிவம் செய்து வழிபாடு இயற்றியமையை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இச்சொல் உவமையாகு பெயராய் பெண்களை உணர்த்தி, அது பின் பொருளாகு பெயராய்ப் பெண்களால் நோற்கப்படும் நோன்பினை உணர்த்தி, பின் அது காரியவாகு பெயராய் அந்நோன்பினைத் தெரிவிப்பதாக திருப்பாவை,[16] திருவெம்பாவை[17] ஆகிய நூல்கள் உணர்த்துகின்றன.

## தாய்த்தெய்வ வழிபாடு

பழைய சமுதாய அமைப்பில் பெண்ணே தலைமை பெற்றவளாக இருந்தாள். பெண் சக்தி என்று கருதப்பெற்றாள்.[18] அவர்கள் தாய்வழி மரபினராக இருந்திருக்க வேண்டும். 'இதனை பெண்ணின் பெருந்தக்க யாவுள'[19] என்னும் திருக்குறள் வாயிலாக உணரலாம். தாய்த்தெய்வ வழிபாடு எத்தகைய தொன்மையானதோ அவ்வாறே பாவை விளக்கின் தோற்றமும் தொன்மையானதாகும். பெண்ணொருத்தி தனது தலையின் இரு பக்கங்களிலும் விளக்குடன் காணப்படும் சுடுமண் பாவை திராவிட பண்பாடு மிளிர்ந்த சிந்து சமவெளிப்பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

 ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

இயற்கை வழிபாட்டைப் போற்றும் வேதகால மக்கள் இருளை அகற்றும் ஒளியாக இறைவனை அறிந்திருந்தனர். பிரம்மாவை ஒளி வடிவில் உலக உயிர்களைப் படைப்பவனாக வேத பாடல்கள் உணர்த்துகின்றன. இந்த ஒளி வடிவமே அனைத்து ஜீவராசிகளின் மூலாதாரம். அதையே நாம் இறைவனாக வழிபடுகிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறது.[20]

## வரலாற்றுப் பின்னணி

தமிழர் பழங்காலம் முதற்கொண்டு பல முகங்களுள்ளனவாய் மண்ணாலும் உலோகத்தாலும் அகல் விளக்குகள் செய்து பல திரிகளிட்டு எண்ணெய் விட்டு தீபம் ஏற்றி வெளிச்சம் கொள்ளச் செய்துள்ளனர். அகல் விளக்கு என்பது குழிந்த கிண்ணம் போன்ற தகழியில் எண்ணெய் ஊற்றி, திரியிட்டு தீபம் ஏற்றுவதற்கு ஏதுவாக அமைந்திருக்கும்.

சங்க காலத்தில் தமிழர் மலைச்சிகரம், தெருவிளக்குக் கம்பங்கள், வீடுகள் முன்பாக பால் ஒளி வீசும் முழு நிலவு நாளும், அறுமீன் என்றழைக்கப்படும் கார்த்திகை நட்சத்திரமும் ஒன்றுசேரும் கார்த்திகைத் திருநாளில் எல்லோரும் ஒன்றுசேர்ந்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரிசையாக கார்த்திகை விளக்குகளை ஏற்றிவைத்து கொண்டாடியதை அக்கால இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.[21]

சங்க காலத்தில் பாவைச் சிற்பங்களைப் படைப்பது ஒரு சிறப்பான கலையாகவும் மரபாகவுமிருந்தது. வீரனுக்கு நடு கல்லைப்போல் கற்புடைய மகளிருக்கு மாசதிக்கல்லை[22] நாட்டுவதிலிருந்து பாவைச் சிற்பங்கள் பிரபலமடைந்தன. கண்ணகிக்குச் சிலையெடுத்த சம்பவம் பாவைச் சிற்ப வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும்.[23] புகார் நகரத்தில் பெண்கள் வழிபட்ட 'கந்திற்பாவை' இருந்ததை மணிமேகலையால் அறிகிறோம்.[24] கொல்லிமலையில் 'கொல்லிப்பாவை' என்னும் பெண் தெய்வத்தின் உருவச்சிலை இருந்தது.[25] அதன் அழகும் தோற்றமும் அனைவரையும் கவர்ந்தன. கவிஞர்கள் அழகான பெண்களைக் 'கொல்லிப்பாவை அன்னாய்' என வருணித்தனர்.

இவ்வாறு கற்புடைய பெண்களை ஏத்திப் போற்றும் பண்பாடு தமிழரிடையே வளர்ச்சியடைந்தபோது வீடு, கோயில் முதலிவற்றிற்கேற்றும் விளக்குகளையும் அழகு மிகுகின்ற கலைத்தொழிலாலே பொலிவு பெற்ற பாவை உருவில் படைத்தனர். இவை 'பாவை விளக்குகள்' எனப்பட்டன. கற்புடைய மகளிர் என்றும் அழியாத் தீபமாகி உலகப் பெண்களை வழிநடத்திச் செல்கின்றனரென்னும் தெய்வீகக் கோட்பாடு பாவை விளக்காகியது.

அழகிய பாவைகளை அரங்கிலே இயற்றி இயக்கவல்ல கலைஞனை,

**வெறியயர் வியன்களம் பொறப்ப வல்லோன்**

**பொறியமை பறவையின் தூங்கல் வேண்டின்**

**என்னாங் கொல்லோ....**

என வரும் பகுதியால் அறியலாம்.[26] மரத்தினால் பாவை செய்து இயக்கும் ஒரு வகைக் கலை (இன்று பொம்மலாட்டக்கலை) திருவள்ளுவர் காலத்திலேயே வழக்கில் இருந்து வந்துள்ளது.[27]

சங்க இலக்கியம் நெடுநல்வாடையில்[28] யவனர் இயற்றிய "வினை மாண் பாவை கை ஏற்று கை அகல் நிறைய நெய் சொறிந்து" என்ற வரிகள் பாண்டியர் அரசவையில் வாணிபம் கருதி வருகைபுரிந்த யவனர்கள் (கிரேக்கர்கள் / ரோமானியர்கள்) பாவை விளக்கினை செய்தளித்துள்ளனர் என்ற செய்தி தெரிய வருகிறது. இத்தகைய விளக்குகள் அவர்கள் நாட்டில் காணப்படவில்லை என்பதன் அடிப்படையில் தமிழகத்திற்கு வந்த குடியமர்ந்த யவனர் உலோகத்தாலான பாவை விளக்கினை உள்ளூர் பாணியை உள்வாங்கிக் கொண்டு தங்களது தொழில்நுட்பத்தில் செய்தளித்துள்ளனர் என்ற உண்மை புலப்படுகிறது.

யவனர் தங்கம் சேர்க்கப்பட்ட உலோகக் கலவையாலான விளக்கினை செய்தளித்துள்ளனர். இவ்விளக்கு தரும் ஒளியில் அரண்மனையில் யாரும் நுழைய முடியாது. யவனர் உருவாக்கிய விளக்கு இன்று கோயில்களில் காணப்படுவதுபோல் கைகளில் விளக்குடன் காணப்படுவதாக இருக்க வேண்டும். இதன் மூலம் பாண்டியர்களுக்கும், யவனர்களுக்கும் இருந்த தொடர்பு நன்கு தெரிய வருகிறது. ஐரோப்பாவில் குறிப்பாக கிரேக்கத்தில் இது மாதிரியான சிற்பம் காணப்படவில்லை. இது பாண்டியர்களுக்காகச் செய்ததாகும். தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்தபோது இங்குள்ள விளக்கு போன்று செய்தளித்திருக்க வேண்டும்.

யவன நாட்டினர் தங்கள் தொழில்திறம் விளங்குமாறு உருவாக்கிய பாவைகளின் கைகளில் ஏந்தியுள்ள வியக்கத்தக்க தோற்றமுடைய அகல் விளக்கு நிறையுமாறு நெய் ஊற்றப்பட்டு அவ்விளக்குகளில் பருத்த திரிகள் இட்டுக் கொளுத்தப்படும் திரிகளின் செந்நிறச் சுடர் மேல்நோக்கி நிமிர்ந்து எரியும். அவ்விளக்குகளில் நெய் ஊற்றுங்காலத்தும், நெய்யை ஊற்றிச் சுடர்கள் தூண்டி விடப்படும். இச்செயலை, அரண்மனையின் வேறுபட்ட பல இடங்களில் பரவியுள்ள இருள் நீங்கும். பெருமையும், தலைமைப் பண்பும் உடைய பாண்டிய மன்னனைத் தவிர, பிற குற்றேவல் செய்யும் ஆண் மக்கள் ஒருவரும் அணுக இயலாத காவலைக் கொண்ட பல பகுதிகளையுடையதாக, அரசமாதேவியின் அந்தப்புரம் அமைந்திருக்கும். அரண்மனைப் பகுதிகளில் இரவுப் பொழுதில் ஒளி வேண்டிப் பாவை விளக்குகள் ஏற்றப்பெறும். அவற்றில் நெய் ஊற்றித் தூண்டி விடும் பணியைக் குற்றவேல் மகளிர் புரிவர். யவன நாட்டிலிருந்து பாவை விளக்குகள் கொண்டு வரப்பட்டன என்பது ஏற்புடையதல்ல. இங்கேயே செய்தளிக்கப்பட்டிருக்க வேண்டும். ரோமானிய, கிரேக்க கலைஞர்களை யவனர்கள் எனக் கூறுவது வழக்கம். சிற்ப எழிலில்

மேன்மையுள்ளவர் யவனர். தமிழகத்தில் யவனர்கள் பலர் புகழ்வாய்ந்த நாட்டுக் கலைஞர்களுடன் தமிழகத்தில் பணிபுரிந்திருக்கிறார்கள். பாவை விளக்குகள் இந்தியா முழுவதும் ஒவ்வொரு மாநிலத்திலும் தனக்கான பாணியுடன் அடிப்படையில் மாற்றமின்றி அமைந்துள்ளன.

சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தசாரதி மணவாள மாமுனிகள் கோயிலிலுள்ள வெள்ளியாலான விளக்கேற்றிய ஆண் உருவம் 1980களில் நடைபெற்ற கோயில் சீரமைப்பின்போது கண்டெடுக்கப்பட்டது. அதிலுள்ள பொ.ஆ.3ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டின்மூலம் அவ்வுருவம் காஞ்சிபுரத்து அரசன் தொண்டைமானுடையதாகும் என அறியலாம்.[29] இவர் திரையர்களின் வழித்தோன்றலாக இருக்க வேண்டும். இச்சிற்பம் கிரேக்கரது சிற்பம்போல் உள்ளது. அதன்பிறகு இது மாதிரியான சிற்பம் காணப்படவில்லை என்பது கவனத்திற்குரியதாகும்.

தென்னிந்தியாவை ஆட்சி செய்த சாதவாகன அரசர் கௌதமி புத்திர சாதகர்ணி (பொ.ஆ. 90 – 150) சாகர், பகலவர் யவனர்களை அழித்து வெற்றிகண்ட சிறந்த மன்னர் ஆவார். அவரது அல்லூரு கல்வெட்டில் யவன விளக்குகள் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது.

பாவை விளக்குகள் அரசிகளின் உருவத்தை ஒத்ததாய் உள்ளன. தலையில் கிரீட அலங்காரம், பொன்னாலான ஆடை, ஆபரணங்களுடன் திகழ்கின்றன. சில கோயில்களில் அரசன், அரசி இருவர் உருவங்களில் பாவை விளக்குகள் செய்தளிக்கப்பட்டுள்ளன. குடும்பங்களில் புகழ் வாய்ந்த பெண்ணின் உருவிலும் அமைப்பர். இது காலம் கடந்து வருங்கால சந்ததியினரால் தங்களது குடும்பத்தைக் காப்பாற்றும் தேவதையாகப் போற்றப்படுகிறது. சிறு உருவிலிருந்து மிகப்பெரிய உருவத்தில் அமைந்துள்ளது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் குறிப்பாக தமிழ்நாடு, கேரளா, கர்நாடகாவிலும் இவற்றைக் காணலாம். தூணின் அடிப்பகுதியில் அல்லது கோயில் நுழைவாயிலின் இருபுறமும் காணலாம்.

தமிழ்நாட்டுக் கோயில்களில் பாவை விளக்குகளை சங்க காலத்திற்குப் பிறகு விஜயநகர – நாயக்கர் காலம் முதற்கொண்டு காண முடிகிறது. இடைப்பட்ட பல்லவர், பாண்டியர் மற்றும் சோழர் காலங்களில் தூங்கா விளக்கு அல்லது நுந்தா விளக்கு சிறப்பிடம் பெற்றமையால் அக்கால பாவை விளக்குகளை அறிய இயலவில்லை. விஜயநகர, நாயக்கர் காலங்களில் மாந்தர் உருவச் சிற்பங்கள் (Portrait Sculpture) முக்கியத்துவம் பெற்றன. எனவே, நின்ற வடிவிலான பெண் சிற்பத்தைப் போன்ற விளக்குகள் விஜயநகர மற்றும் நாயக்கர் காலக் கலையின் ஒரு சிறப்பாக 16ஆம் நூற்றாண்டு முதல் காணப்படுகிறது. அக்காலத் தமிழகத் திருக்கோயில்களில் விளக்கேந்திய பாவையர் படிமங்கள் மிகுந்த அலங்கார வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன.

## கோயில்களில் பாவை விளக்குகள்

சைவக் கோயில்களில் பாவை விளக்கு மீனாட்சி உருவில் வலது பக்க தோளில் கிளியை ஏந்தியவாறும், வைணவக் கோயில்களில் ஆண்டாள் உருவில் இடதுபக்கத் தோளில் கிளியை ஏந்தியவாறும் காணப்படும். சிலவற்றுள் இரு தோள்களிலும் கிளி அமர்ந்தவாறும் கிளியின்றியும் காணப்படுகின்றன.

மண்ணின் மணம் வீசும் பாவை விளக்குகளைக் காண்பவர் உள்ளத்தில் கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல பெண்களின் கைகளிலே விளக்கு பூரித்தெழுந்த அங்கங்களிலே ஓடித் துடிக்கும் உணர்ச்சிகள்,

**தமிழ்நாட்டுப் பரமச் சிற்பி சிறுமருங்கிற்**
**கொல்கின முல்லைக்கொடி**
**சிலம்பொலிக்கும் இணையடி**
**நலம்புகழ் செறி குறங்கும் பனைத்தோளும்**
**தற்கரியதாய நகைமுகமும் புரிகுழலும்**

எனப் பாடத்தோன்றும்.

கோயில்களுக்கு விளக்கு கொடையாக அளிப்பதும் அவற்றிற்கு எண்ணெய்யை கொடையாக வழங்குவதும் மிகத் தொன்மையான தமிழக மரபாகும். இன்றும் கோயில்களில் வெள்ளிக்கிழமை பெண்கள் விளக்கேற்றி வழிபடுவது நடைமுறையில் உள்ளதாகும். நோய் நீங்கி நலம் பெறவேண்டி அல்லது நற்செயல்களுக்காக வேண்டுதல் காரணமாக விளக்கு செய்து வைக்கும் வழக்கத்தைக் காண முடிகின்றது. இவ்வகை விளக்குகள் சிவப்பு வண்ணமுடைய அலங்கார வரைவுகளுடன் காணப்படுவது கருமார் கலைக்குச் சிறப்பூட்டுவனவாக அமைகின்றன. அவை காணிக்கை அல்லது நேர்த்திக்கடன் படைப்புகளாகும். அணி அலங்காரங்களுடன் வண்ணப்பூச்சு செய்யப்பட்டுள்ளன.

அவ்விளக்குகளை அளிப்பவரின் மற்றும் அப்பகுதி மக்களின் மரபு நிலைக்கின்ற வண்ணங்களும் உருவ அலங்கார நிறங்களும் இடம்பெறுகின்றன. நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு பூரண குணம் அடைந்தவுடன் தங்களது உருவத்தையே வடிவங்களாய் செய்து காணிக்கையாக்கி விடுகின்றனர். நந்தவனம், கல்யாண மண்டபம், வீடுகள் போன்ற இடங்களில் அழகிற்காகவும் அமைப்பர்.

## விளக்கு நாச்சியார்

பழந்தமிழர் இருளைப்போக்கும் விளக்கை விளக்கு நாச்சியாராக அழகே உருவாக அமைத்துள்ளனர். இல்லத்தரசிகளை குடும்ப விளக்காக கௌரவிப்பது தமிழர் மரபு. எனவே, விளக்கை விளக்கு நாச்சியாராகப் பூச்சூட்டி குங்குமம் இட்டு வழிபடுவர்.

தமிழகத்திலுள்ள பல கோயில்களில் காணப்படும் விளக்கேந்திய பாவையர் படிமங்கள் நாயக்கர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டனவாகும். மதுரை மீனாட்சி கோயிலிலுள்ள விளக்கேந்திய பெண்ணின் உருவம் அலங்கார வேலைப்பாடுகளுடன் திகழ்கிறது. இப்படிமம் தன் இரு கைகளில் விளக்கொன்றை ஏந்தி நிற்பதாகப் படைக்கப்பட்டுள்ளது. இவள் தலையில் அரைச்சந்திர வடிவ அணி, வட்ட வடிவ அணி, நெற்றிச்சுட்டி முதலியனவும், காதுகளில் கம்மல், கழுத்தில் பதக்கத்துடன் கூடிய அணி, முத்துமாலை முதலியவையும், இடுப்பில் அரச இலையை ஒத்த அணியும் காணப்படுகின்றன. இவள் அணிந்திருக்கும் பூ வேலைப்பாடு நிறைந்த சேலை மார்பகங்களை மறைத்து, இடப்புறத்தோள் வழியாகச் செல்வதைக் காணலாம்.

பெண்மையழகுடன் விளக்குநாச்சியாரின் சிற்பம் திருக்கோகர்ணம் கோயிலில் காணப்படுகிறது. இச்சிற்பம் பழங்கால ஆடை, அணிகலன்களால் அணி செய்யப்பட்டுள்ளமையிலிருந்து அக்காலப் பண்பாட்டினை அறிய முடிகிறது. பெண்மை அழகு கொஞ்சும் இச்சிற்பத்தின் உயரம் 4¼ அடியாகும். தலை முதல் கால் வரை சகல விதமான ஆடை, ஆபரணங்களுடன் தீபலட்சுமி காட்சியளிக்கிறாள். ஸ்ரீ பிரகதாம்பாள் சந்நிதியிலுள்ள இச்சிற்பம் தலையிலே முன்பக்கம் நெற்றிச்சுட்டியும், சூரியப் பிரபையும், பின்புறத்தில் ராக்கொடி, கொட்டை ஜடைநாகம், திருக்குப் பூக்களைக் கொண்டு விளங்குகிறது. ராக்கொடியைச் சுற்றி அழகாய்த் தாழம்பூக்களை வைத்து அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவ்விதமாகத் தலை அலங்காரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

காதிலே தோடு அதனடியில் ஜிமிக்கி ஆடுகிறது. காதின் பக்கவாட்டில் முருகு, குருகு, கர்ணப்பூ முதலியவை அணியத் துவாரங்கள் இருக்கின்றன. கழுத்தில் பூரான், அட்டிகை, கருகுமணி, பொட்டுச்சரம், முத்துச்சரம், கோதுமை மணிமாலை அலங்கரிக்கின்றன. புஜத்தில் வங்கி, அதனடியில் குஞ்சலத்துடன் பாஜிபந்து (பாசிப்பந்து), கையில் பாட்லி (பாட்டில்), கங்கணம், தோடா, விரல்களில் மோதிரங்கள் ஆகியவற்றை அணிந்துள்ளார்.

மெல்லிய இடையில் ஒட்டியாணமும், அரைஞாணும், காலில் பாடகம், கொலுசு, பாதசுரம், கால் விரங்களிலே மிஞ்சியும் (காலாழி), மெட்டியும் அணி செய்கின்றன. மூக்குத்தியையும், புல்லாக்கையும் (பிலாக்கையும்), தனியே மாட்டிக் கழற்றுவதற்காகத் துவாரங்கள் செய்தளித்துள்ளனர்.

வலது தோளில் கிளி சுவாதீனத்துடன் அமர்ந்துள்ளதைப் பார்க்கும்போது காவியங்களிலே நாயகிக்குத் துணையாக வந்து கொஞ்சும் மொழி பேசும் கிளியை (அவளின் சுக, துக்கங்களைக் கேட்கும்) ஞாபகப்படுத்துகிறது. தீபராணியானவள் விளக்கு ஏந்தியவாறு காணப்படுகிறாள். இடையைச் சுற்றி முத்துமணிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

உடலமைப்பும், நிற்கும் நிலையும் இவளை ஓர் அழகுராணியாகக் காட்டுகின்றன. ஒரு பெண் தன்னை அழகுபடுத்திக்கொள்ள எத்தனை விதமான அணிகலன்களால்

அலங்கரித்துக்கொண்டாள் என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. அழகும் ஆபரணங்களும் நிறைந்துள்ள இச்சிற்பத்தில் அழகும் அணியும் இசைந்துள்ளன.

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில் அம்முனு அம்மணி பாவை விளக்கு (உயரம் 120 செ.மீ.) மிகச்சிறந்த உதாரணமாகும். தஞ்சை மராட்டிய மன்னர் அமரசிம்மன் புதல்வர் பிரதாபசிம்மன் அம்மான் பெண் அம்முனு அம்மணி தனது உருவத்தையே பாவை விளக்காக்கித் (04.07.1853) தனது படிமமே தீபம் ஏந்தும் வண்ணம் செய்தாள். தோளில் கிளி அமர்ந்திருக்க, சடை அலங்காரத்துடன் சகல ஆடை ஆபரணங்களுடன் இவ்விளக்கு திகழ்கிறது.[30] லால்குடி சப்தரிஷீஸ்வரர் கோயிலுக்கு 1838இல் ஒன்றும் 1891இல் மற்றொன்றுமாக இரண்டு பாவை விளக்குகள் செய்தளிக்கப்பட்டுள்ளன என்பது அச்சிற்பங்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிகிறது. ஒன்று கன்னிப் பெண்ணாகவும், மற்றொன்று திருமணமான பெண்ணாகவும் காட்டப்பட்டுள்ளது. சிதம்பரம் நடராஜர் கோயில், வைத்தீஸ்வரன் கோயில், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாத சுவாமி கோயில் போன்ற பழம்பெரும் கோயில்களில் வேலைப்பாடுகள் மிகுந்த பாவை விளக்கு படிமங்களைக் காணலாம்.

## முடிவுரை

தமிழர் வழிபாட்டில் திருவிளக்கிடுதல் ஒரு புனிதமான செயல். பல்வேறு வகையான விளக்குகளுள் பாவை விளக்கு கலை வரலாற்றில் தனக்கென சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. கற்புடைய மகளிர் அழியாத் தீபமாகி உலகை வழிநடத்திச் செல்வர் என்ற தெய்வீக கோட்பாட்டினடிப்படையில் பாவை விளக்கு தோன்றியது. இதன் வரலாறு மிகவும் தொன்மையானது. காலந்தோறும் வளர்ச்சியடைந்து பல கலை நுணுக்கங்களை உடையதாகும். அவற்றுள் விசயநகர நாயக்கர் காலக் கோயில் சிற்பங்களில் விளக்கேற்றிய பாவையர் படிமங்கள் மிகுந்த அலங்கார வேலைப்பாடுகளுடன் காண்பவரைக் கவர்வனவாகும். பிற்காலத்தில் பாவையருக்கு மாற்றாக மாந்தர் மற்றும் இறை உருவங்களும் இடம்பெற்றுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. சிங்காரவேலு முதலியார், **அபிதான சிந்தாமணி,** ஏஷியன் எஜுகேஷனல் சர்வீசஸ், நியூடெல்லி, 1982, ப. 861
2. **பெரும்பாணாற்றுப்படை,** 191; **நெடுநல்வாடை,** ப. 441
3. **திருமந்திரம்,** ப. 703
4. **திருவருட்பா,** முதல் திருமுறை, ப. x
5. மகாவித்துவான் கே. ஆறுமுக நாவலர், **இந்து மத இணைப்பு விளக்கம்,** பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, 2007, ப. 118

6. ஸ்ரீ சிவஞான சுவாமிகள், **சிவஞான சித்தியார்,** திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, 1956, சிவஞானசித்தியார் சுபக்கம், சாதனவியல், சூத். 8, பா. 18, வரி – 3, ப. 300
7. திருநாவுக்கரசர் அருளிய **தேவாரம்,** நான்காம் திருமுறை, 4 : 77 : 3 – 3
8. **நற்றிணை,** 201 : 5 – 11
9. மேலது.
10. **புறநானூறு,** 11 : 3, **திருக்குறள்,** 407
11. **அகநானூறு,** 269 : 13, **ஐங்குறுநூறு,** 124 : 2
12. **நெடுநல்வாடை,** 115 - 123
13. **மதுரைக்காஞ்சி,** 410
14. **Indian Archaeology – A Review,** 1964 – 65, pp. 20 & 25; 1970 – 71, pp. 32 – 35.
15. **குறுந்தொகை,** 292 : 3 - 4
16. ஆண்டாள் அருளிச் செய்த **திருப்பாவை**, B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை, 1979, பா. 2
17. சி. பாலசுப்பிரமணியன், **திருவெம்பாவை,** பாரி நிலையம், சென்னை, 1987, பக். 5 – 6
18. **Early Indus Civilizations,** 2nd Edition, p. 54
19. **திருக்குறள்,** அதிகாரம் 6, குறள் 54
20. **உபநிடதம்,** 1.3.28
21. **அகநானூறு,** 11, 141, 185 & 202
22. **A.R.E.** 1110 of 1944
23. **சிலப்பதிகாரம்,** 28 : 222 - 25
24. **மணிமேகலை,** புலியூர்க்கேசிகன் தெளிவுரை, பாரி நிலையம், சென்னை, 2017, கந்திற்பாவை வருவதுரைத்த காதை, பதிகம் 21, பாடல் 17, கந்திற் பாவையின் வரலாறு, வரிகள் 130 – 144, பக். 239 – 240.
25. **குறுந்தொகை,** 100 : 5 - 6
26. **அகநானூறு,** 98 : 19 - 21
27. **திருக்குறள்,** 1020 & 1057
28. **நெடுநல்வாடை,** 101 - 107
29. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் பாவை விளக்கு, காஞ்சிபுரம்.
30. குடவாயில் பாலசுப்பிரமணியன், **சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987, பக். 347 – 349.